அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை: 04/2011

எனது இல: CS/ICTS/01/Abs.Committee
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு 07,
2011.02.15

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
மாவட்ட செயலாளர்கள்/ அரசாங்க அதிபர்கள்,
பிரதேச செயலாளர்கள் அனைவருக்கும்.

**இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்ப சேவைக்குள் உள்ளீர்த்தல்.**

1631/20 ஆம் இலக்க 2009.12.09 ஆம் திகதிய இலங்கை சனநாயகச் சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்ப சேவைப் பிரமாணக் குறிப்பானது 2009.07.01 ஆம் திகதியிலிருந்து பயனுறுகின்றது.

02. உள்ளீர்ப்பு:

மேற்படி சேவைப் பிரமாணக் குறிப்பினதும் அதன் 10 ஆம் பிரிவினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக வரவழைக்கப்பட்ட தகவல்களின்படி, இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்ப சேவைக்குள் உள்ளீர்க்கப்படுவதற்கு விருப்புத் தெரிவித்துள்ள உத்தியோகத்தர்கள், சேவைப் பிரமாணக் குறிப்பின் 1 ஆம் அட்டவணையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளுக்குப் பின்வரும் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு 2009.07.01 ஆம் திகதியிலிருந்து பயனுறும் வண்ணம் உள்ளீர்ப்புச் செய்யப்படுதல் வேண்டும். இந்த உத்தியோகத்தர்கள் 2009.07.01 ஆம் திகதியிலிருந்து இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பச் சேவைப் பிரமாணக் குறிப்பின் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டவராதல் வேண்டும்.

2.1. அமைச்சரவை அல்லது தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம்/ முகாமைத்துவச் சேவைத் திணைக்களம் என்பவற்றினால் கணினித் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பப் பாடமொன்று தொடர்பாக உரியதாக அங்கீகரிக்கப்பட்டதொரு ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறை அல்லது பதவி உயர்வுத் திட்டத்திற்கு ஏற்ப 2009.12.09 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னரான பதவி உயர்வுகளான நியமனங்கள் அல்லது நியமனங்களின் பின்பு நிரந்தர ஓய்வூதியப் பதவியொன்றில் சேவையாற்றிவரும் அல்லது சேவையாற்றிய உத்தியோகத்தர்கள் மட்டும் சேவைக்குள் உள்ளீர்ப்புச் செய்யப்படுதல் வேண்டும். 2009.07.01 ஆம் திகதியிலிருந்து 2009.12.09 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவர்கள் உரிய பதவிக்கு நியமனம் பெற்ற திகதியில் இருந்து பயனுற்றிருப்பதற்கு உள்ளீர்ப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

2.2. தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்/ முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரமானது உத்தியோகத்தரொருவரின் ஆட்சேர்ப்பு/ பதவியுயர்வு நேரத்தில் பதவியொன்றிற்காகப் பெறப்படாதிருக்குமிடத்து பின்னரானதொரு சந்தர்ப்பத்தில் அப்பதவிகளுக்கான முறைசார் அங்கீகாரம் பெறப்பட்டிருப்பின் உள்ளீர்ப்புச் செயற்பாட்டின் பொழுது அப்பதவி அங்கீகரிக்கப்பட்டதொரு பதவியாகக் கருதப்படுதல் வேண்டும்.

2.3. (i) தரப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர்கள்:

ஏற்றவாறு ஆட்சேர்ப்பு அல்லது பதவியுயர்வு குறித்துத் தரப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர்கள் தரத்திற்கு அமைவாக உரிய வகுப்பின் முறையான தரத்திற்குள் உள்ளீர்க்கப்படுதல் வேண்டும். உள்ளீர்ப்பு மட்டத்தைவிட உயர்ந்த வகுப்பு/ தரமொன்றிற்கு உள்ளீர்க்கப்பட்ட பின்பு பதவியுயர்வானது அவ் வகுப்பு/ தரத்திற்காக விதித்துரைக்கப்பட்ட தகைமைகளின் மீது தங்கியிருத்தல் வேண்டும்.

(ii) தரப்படுத்தப்படாத உத்தியோகத்தர்கள்:

தரப்படுத்தப்படாத உத்தியோகத்தர்கள் உரிய வகுப்பின் வேதன அளவுத் திட்டத்தின் ஆரம்ப வகுப்பிற்குள் உள்ளீர்க்கப்படுதல் வேண்டும்.

விதித்துரைக்கப்பட்ட தகைமைகளைத் திருப்திப்படுத்தாத உத்தியோகத்தர்களுக்குக் கீழே 5 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு உரிய தகைமைகளைத் திருப்திப்படுத்துவதற்குச் சலுகைக் காலப்பகுதியொன்று வழங்கப்பட வேண்டும். அத்துடன் அதற்கமைய, அவர்கள் அந்தக் காலப்பகுதிக்குள் வேண்டப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும். தாபன விதிக்கோவை மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கைமுறை விதிகளின் ஏற்பாடுகளின் பிரகாரம், உரிய தகைமைகளைத் திருப்திப்படுத்துவதற்குத் தவறும் உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

2.4. சேவைப் பிரமாணக் குறிப்பில் சுட்டிக்காட்டப்பட்ட ஏற்பாடுகளானவை 2009.06.30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்பு ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களுக்கு இயைபற்றதாதல் வேண்டும்.

**03. உள்ளீர்ப்பின் பொருட்டு விருப்பினைத் தெரிவிக்காது ஓய்வு பெறுவதற்கு விருப்பினைத் தெரிவிக்கின்ற உத்தியோகத்தர்கள்:**

3.1. இந்தச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளானவை உள்ளீர்ப்பின் பொருட்டு விருப்பினைத் தெரிவிக்காது ஓய்வு பெறுவதற்கு விருப்பினைத் தெரிவிக்கின்ற உத்தியோகத்தர்களுக்கு இயைபற்றதாதல் வேண்டும். அத்தகைய உத்தியோகத்தர்களின் ஓய்வு பெறுகையானது, உத்தியோகத்தரால் தற்பொழுது வகிக்கின்ற பதவியின் நியமன அதிகாரியால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். ஓய்வு பெறுகைக்காக உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்ட விருப்புத் தேர்வானது எந்தச் சூழ்நிலையின் கீழும் மாற்றப்பட முடியாதது.

3.2. அத்தகைய நிகழ்வுகளில் உள்ளீர்க்கப்படுவதற்கோ அல்லது ஓய்வு பெறுவதற்கோ விருப்பினைத் தெரிவிக்காத உத்தியோகத்தர்கள் இருப்பின், சேவைப் பிரமாணக் குறிப்பின் 11.2 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் இயைபுள்ளதாதல் வேண்டும்.

## 04. சேவைக்காலம்:

4.1. உதாரணமாக, பதவியொன்றுக்கு நியமிக்கப்பட்ட அல்லது தரமுயர்த்தப்பட்ட பின்பு அமைச்சரவையின் அங்கீகாரமானது பெறப்பட்டிருக்காத மற்றும் நியமனம்/ பதவியுயர்வின் திகதியின் மீதான விசேட ஏற்பாடுகள் அமைச்சரவைத் தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டிருக்காதவிடத்து, பதவிக்கு நியமன/பதவியுயர்வுத் திகதியாக அமைச்சரவைத் தீர்மானத் திகதியானது கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் சேவைக்காலமானது அதற்கமையக் கணிக்கப்படுதல் வேண்டும்.

4.2. உதாரணமாக, பதவியொன்றுக்கு நியமனம் அல்லது பதவியுயர்வின் பின்பு மேற்படி 2.2 இன் பிரகாரம் அங்கீகாரமானது பெறப்பட்டவிடத்து, தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம் அல்லது முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட பதவியின் திகதியில் இருந்தான காலப்பகுதி உத்தியோகத்தரினது சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

4.3. உதாரணமாக, கணினித் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பத்தின் பாடங்களுக்கு வெளியிலான சேவை/ பதவியில் இருந்து ஏற்றபடி விடுவிக்கப்பட்ட பின்னர் உத்தியோகத்தர்கள் தற்போதைய பதவிக்கு நியமிக்கப்பட்டவிடத்து, அத்தகைய சேவைக்கு வெளியே தற்போதைய பதவியானது இந்தச் சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கு இயைபுடைய சேவைக்காலப்பகுதியொன்றாகக் கருதப்படுதல் ஆகாது. (இருந்தபொழுதும், சேவையின் அத்தகைய காலப்பகுதியானது, ஓய்வூதியத்தினைக் கணிப்பிடும் நோக்கத்திற்காகக் கட்டாயம் கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும்).

## 05. இடைக்கால ஏற்பாடுகள்:

சேவைப் பிரமாணக் குறிப்பில் விதித்துரைக்கப்பட்ட தகைமைகளைத் திருப்திப்படுத்துகின்ற உத்தியோகத்தர்கள் மட்டும் உள்ளீர்க்கப்படுதல் வேண்டும்.

சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம், சேவையில் தற்பொழுது இருக்கின்ற ஆனால் தகைமைகளைத் திருப்திப்படுத்தாத உத்தியோகத்தர்களுக்கு உரிய தகைமைகளைத்

திருப்திப்படுத்துவதற்கு 2013.12.31 ஆம் திகதி வரையான சலுகைக் காலப்பகுதியொன்று வழங்கப்படுதல் வேண்டும். அதற்கமைய, அவர்கள் பின்வரும் விதத்தில் விதித்துரைக்கப்பட்ட தகைமைகளைத் திருப்திப்படுத்துவதற்கு வேண்டப்படுகின்றனர். அக் காலப்பகுதியில் அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு முன்னைய வேதன அளவுத் திட்டத்தின் அடிப்படையில் முன்னைய பதவிப் பெயரின் கீழ் வேதனம் வழங்கப்படுதல் வேண்டும்.

**5.1. III ஆம் வகுப்பிற்கு உள்ளீர்க்கப்படுகின்ற உத்தியோகத்தர்கள்:**

5.1. (i) (அ). சேவைப் பிரமாணக் குறிப்பின் 8.1.1 (உ) ஆம் பிரிவில் விதித்துரைக்கப்பட்ட க.பொ.த.(சா/த) இன் தகைமை பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ). சேவைப் பிரமாணக் குறிப்பின் 8.1.1 (உ) ஆம் பிரிவில் விதித்துரைக்கப்பட்ட க.பொ.த.(உ/த) இன் தகைமையானது உள்ளீர்க்கப்படுவதற்கான கட்டாய தேவைப்பாடொன்றாக இருக்க மாட்டாது.

5.1. (ii) உள்ளீர்ப்பில் பின்வரும் தகைமைகளைக் கருத்தில் கொண்டு சேவைப் பிரமாணக் குறிப்பின் 8.1.1 (உ) ஆம் பிரிவின் பிரகாரம் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டிய தொழில்சார் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்யாதவர்கள், தொழில்சார் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்தலின் தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(அ). மூன்றாம் நிலைக்கல்வி, தொழில் கல்வி ஆணைக்குழுவினால் தரப்படுத்தப்பட்ட தேசிய வாழ்க்கைத் தொழில் தகைமைகளின் ஐந்தாம் மட்டத்தில் (NVQ5) தொழில்சார் அடைவொன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

அல்லது

(ஆ). மூன்றாம் நிலைக்கல்வி, தொழில் கல்வி ஆணைக்குழு அல்லது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணினி மற்றும் தகவல் தொழில் நுட்பத்திற்குத் தொடர்பான ஏதாவது பாடத்திட்டங்களை உள்ளடக்கி ஆகக் குறைந்தது 720 மணித்தியாலங்களைக் கொண்டதான கற்கை நெறியொன்றினைத் திருப்திகரமாகப் பூர்த்தி செய்த பின்பு சான்றிதழ் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

5.1. (iii) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து, பிரதான பாடங்களில் ஒன்றாக இருக்கின்ற கணினி/ தகவல் தொழில் நுட்பப் பட்டமொன்றினை அல்லது கணினி/ தகவல் தொழில் நுட்பப் பட்டமொன்றினைக் கொண்ட உத்தியோகத்தர்கள் சேவைப் பிரமாணக் குறிப்பின் 8.1.1 (உ) ஆம் பிரிவில் விதித்துரைக்கப்பட்ட தொழில்சார் தகைமைகளைக் கொண்டவர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

5.1. (iv). ஓய்வு பெறும் வயதினை அடைந்த உத்தியோகத்தர்கள்:

2009.07.01 ஆம் திகதியன்று 55 வயதினைப் பூர்த்தி செய்த ஆனால் அடிப்படைக் கல்வித் தகைமைகளையும் உரிய தொழில்சார் தகைமைகளையும் திருப்திப்படுத்தாத உத்தியோகத்தர்கள், அரசாங்க சேவைப் பயிற்சி நிறுவனத்தினால் அல்லது நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படுகின்ற நிறுவனமொன்றினால் நடாத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்ட கணினிக் கற்கை நெறியொன்றினைச் சலுகைக்காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்தல் வேண்டும்.

**5.2. 2 ஆம் வகுப்பிற்கு உள்ளீர்க்கப்படுகின்ற உத்தியோகத்தர்கள்:**

5.2. (i). 06/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை அல்லது மேற்படி திருத்தப்பட்டு வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் MN 6 - 2006 A வேதன அளவுத் திட்டத்தில் உள்ள வேதனங்களைப் பெறுகின்ற ஆனால் சேவையின் 2 ஆம் வகுப்பின் தரம் I இற்கு உள்ளீர்ப்புச் செய்யப்படாத உத்தியோகத்தர்கள் உரிய விதத்தில் அங்கீகரிக்கப்பட்ட

பதவியினை வகிப்பார்களாயின் சேவையின் 2 ஆம் வகுப்பின் II ஆம் தரத்திற்குள் உள்ளீர்ப்புச் செய்யப்படுதல் வேண்டும். (வேண்டப்படும் தகைமைகள் திருப்திப்படுத்தப்பட்டிருப்பின்).

5.2. (ii). MN 6 - 2006 A வேதன அளவுத் திட்டம் அல்லது MN 07 - 2006 A வேதன அளவுத் திட்டத்தில் உள்ள வேதனங்களின் படிநிலை 12 அல்லது அதற்கு மேலான படிநிலையைப் பெறுகின்ற உத்தியோகத்தர்கள் சேவையின் 2 ஆம் வகுப்பின் I ஆம் தரத்திற்குள் உள்ளீர்ப்புச் செய்யப்படுதல் வேண்டும். (வேண்டப்படும் தகைமைகள் திருப்திப்படுத்தப்பட்டிருப்பின்).

5.2. ((iii). MN 6 - 2006 A வேதன அளவுத் திட்டத்திற்கு வெளியேயான திட்டங்களின் மீதான வேதனங்களைப் பெறுகின்ற, அத்துடன் கணினித் துறை தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்கள்,

(அ). இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்ப சேவையின் 2 ஆம் வகுப்பு தொடர்பான பதவியொன்று நிறுவனத்தின் தேவைப்பாடுகள் குறித்து தங்கியிருக்கின்ற முகாமைத்துவச் சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருப்பின் அத்துடன்

(ஆ). உத்தியோகத்தர் மேற்படி (அ) இன் கீழ் உருவாக்கப்பட்ட பதவிக்கு நியமிப்பதற்காக விதித்துரைக்கப்பட்ட தகைமைகள் மற்றும் நிபந்தனைகள் அனைத்தையும் திருப்திப்படுத்தியிருப்பின்

மட்டும் சேவையின் தரம் II இற்கு உள்ளீர்ப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

**5.3. I ஆம் வகுப்பிற்கு உள்ளீர்க்கப்படுகின்ற உத்தியோகத்தர்கள்:**

5.3. (i). தற்பொழுது SL - 1 - 2006 வேதனத்தைப் பெறுகின்ற இந்தச் சேவைப் பிரமாணக் குறிப்பின் I ஆம் வகுப்பில் உள்ள பதவியொன்றிலோ அல்லது அத்துடன் சமனான பதவியொன்றிலோ சேவையாற்றுகின்ற

உத்தியோகத்தர்கள் இயைபுடைய தரத்திற்குள் உள்ளீர்ப்புச் செய்யப்படுதல் வேண்டும். (வேண்டப்படும் தகைமைகள் திருப்திப்படுத்தப்பட்டிருப்பின்).

5.3. (ii). சேவைப் பிரமாணக் குறிப்பின் 8.6.1 (உ) பிரிவில் விதித்துரைக்கப்பட்ட தகைமைகளைத் திருப்திப்படுத்தாத உத்தியோகத்தர்கள் வழங்கப்படுகின்ற சலுகைக்காலப்பகுதிக்குள் தகவல் தொழில் நுட்பத்தில் பட்டப்பின் திப்புளோமாவொன்றினைப் பெற்றவுடன் உள்ளீர்ப்பிற்காகக் கவனத்தில் எடுக்கப்படுதல் வேண்டும்.

06. முதுநிலையும் வேதனமும்:

6.1. விதித்துரைக்கப்பட்ட தகைமையுடன் உள்ளீர்க்கப்படுகின்ற உத்தியோகத்தர்கள் மேற்படி பந்தி 4 இல் தெளிவுபடுத்தப்பட்டுள்ளவாறு கணக்கிடப்படுகின்ற முன்னைய சேவைக்காலப் பகுதியின் அடிப்படையில் உள்ளீர்ப்புத் திகதியில் இருந்தான முதுநிலைக்கு உரித்துடையவராதல் வேண்டும்.

இடைக்காலப் பகுதிக்குள் விதித்துரைக்கப்பட்ட தகைமைகளைத் திருப்திப்படுத்துகின்ற உத்தியோகத்தர்களுக்கு தகைமைகளின் பூர்த்தித் திகதியில் இருந்து பயனுற்றிருக்கும்படி இருப்பதற்கு ஒவ்வொரு வகுப்பு/ தரத்தில் உள்ள முதுநிலை வழங்கப்படுதல் வேண்டும்.

6.2. உள்ளீர்க்கப்படுகின்ற உத்தியோகத்தரொருவரின் புதிய வேதன அளவுத்திட்டமானது முன்னைய வேதன அளவுத்திட்டத்திலிருந்து வேறுபட்டு இருக்குமிடத்து, அவரது வேதனமானது, 2009.07.01 ஆம் திகதியிலிருந்து பயனுறும் வண்ணம் தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மாற்றம் செய்யப்படுதல் வேண்டும். ஆனால் 2010.12.31 ஆம் திகதிவரை அவருக்கு வேதன நிலுவைகள் வழங்கப்படாதிருத்தல் வேண்டும். இருந்தபொழுதிலும், அவரது வேதன ஏற்றத் திகதியானது மாற்றம் இல்லாது அப்படியே இருத்தல் வேண்டும்.

6.3. உத்தியோகத்தரொருவர் பதவியினைப் பெறுவதற்குத் தனது விருப்பினைத் தெரிவித்து ஆனால் அந்தப் பதவிக்கு உரித்துடைய வேதனத்தினைப் பெறுவதற்கு மறுப்புத் தெரிவிக்குமிடத்து, அத்தகைய உத்தியோகத்தர் அவருக்குப் பிரத்தியேகமாக இதுவரை அவரால்/ அவளால் பெறப்பட்ட பதவிக்கு உரித்துடையவராயிருத்தல் வேண்டும்.

**07. சேவையில் உறுதிப்படுத்தல், வினைத் திறன் காண் தடைகள் மற்றும் பதவியுயர்வுகள்:**

7.1. 2009.07.01 ஆம் திகதியன்று உறுதிப்படுத்தப்படாமல் புதிய சேவைக்கு உள்ளீர்க்கப்படுகின்ற உத்தியோகத்தர்கள், முன்னைய பதவியின் ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறையின் கீழ் அவர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்த பொழுதும்கூட, ஆட்சேர்ப்பின் ஒவ்வொரு தரத்திற்கும் உரிய வினைத் திறன் காண் தடைப்பரீட்சையினை அவர்கள் சித்தியடைந்தவுடன், நியமன அதிகாரியினால் புதிய சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

7.2. சேவைப் பிரமாணக் குறிப்பின் 7.3, 7.4 மற்றும் 7.5 ஆம் பிரிவுகளில் சுட்டிக்காட்டப்பட்ட வினைத் திறன் காண் தடைப்பரீட்சையானது 2009.07.01 ஆம் திகதியிலிருந்து உள்ளீர்க்கப்படுகின்ற உத்தியோகத்தர்களுக்கு இயைபுடையதாதல் வேண்டும்.

7.3. மேற்படி 4 ஆம் பந்தியின் பிரகாரம், சேவைக் காலப்பகுதியினைக் கருத்திலெடுக்கின்ற முன்னைய பதவியினை வகித்தபொழுது புதிய சேவைப் பிரமாணக் குறிப்பினால் அவர்களுக்காக விதித்துரைக்கப்பட்ட வினைத் திறன் காண் தடைப்பரீட்சையில் உள்ளடக்கப்படுகின்ற ஏதாவது பாடத்தினை உள்ளீர்க்கப்படுகின்ற உத்தியோகத்தர்கள் சித்தியடைவார்களாயின், நியமன அதிகாரியானவர், உத்தியோகத்தர்களின் வேண்டுகோளின் பேரில், மீண்டும் அந்தப் பாடத்தினைச் சித்தியடைவதன் தேவைப்பாட்டிலிருந்து அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு விலக்களிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

7.4. முன்னைய பதவியின் ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையில் அல்லது நியமனக் கடிதத்தில் வினைத்திறன் காண் தடையினை உள்ளடக்குவதன் காரணமாக வினைத் திறன் காண் தடைப்பரீட்சையினைச் சித்தியடையாத உத்தியோகத்தர்கள்

இருப்பின், அவர்கள் இடைக்காலப்பகுதிக்குள் உரிய வகுப்பில் உள்ள தரத்தின் வினைத் திறன் காண் தடைப்பரீட்சையில் சித்தியடைவதற்கு வேண்டப்படுகின்றனர். உரிய முறையில் உரிய வகுப்பில் பதவியுயர்வினைப் பெற்ற பின்பு தரப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அவர்கள் அத்தகைய வினைத் திறன் காண் தடைப்பரீட்சையில் சித்தியடையும் வரை உரிய தரம் மற்றும் வகுப்பில் அவர்களுக்கு இடப்படுகின்ற வேதனங்கள் வழங்கப்படுதல் வேண்டும்.

**08. பூர்த்தியாக்கப்படாத பணிகள்:**

8.1. சகல நியமன அதிகாரிகளும் முன்னைய பதவிகளின் ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையின் கீழ் 2009.07.01 ஆம் திகதிக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட தாபனச் செயற்பாடுகள் அனைத்தையும் முடிவுறுத்தல் வேண்டும்.

8.2. குற்றச்சாட்டுப்பத்திரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர்களின் ஒழுக்காற்று நடவடிக்கை மற்றும் முன்னைய பதவிகளை வகிக்கின்ற பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ள முறையான ஒழுக்காற்று விசாரணைகள் தொடர்பாகத் தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் பொருட்டு ஏனைய விடயங்கள் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்குக் குறித்துரைக்கப்படுதல் வேண்டும்.

**09. சொற்றொடர்களுக்கிடையே முரண்பாடு அவதானிக்குமிடத்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை:**

இச் சுற்றறிக்கையில் சிங்களம், தமிழ் ஆங்கில சொற்றொடர்களுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் அல்லது ஒவ்வாமைகள் அவதானிக்குமிடத்து சிங்கள மொழிச் சொற்றொடரே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

10. **சுற்றறிக்கையில் ஏற்பாடு செய்யப்பட்டிராத விடயங்கள்:**

இச் சுற்றறிக்கையின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிராத விடயங்களாவன அரசாங்க நிர்வாக விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

11. **இச் சுற்று நிருபம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் செயலாளரினது இணக்கத்துடன் வெளியிடப்படுகின்றது.**

ஒப்பம்/ பீ. வீ. அபேகோன்,
செயலாளர்,
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள்
அமைச்சு.